**செய்தி வெளியீடு எண்.730** **நாள்.5.9.2008**

மக்கள் நல்வாழ்வு துறை

<u>செய்தி குறிப்பு</u>

இறப்புக்குப் பின் மனித உடலை மருத்துவ மாணவர்களின் கல்வி நோக்கங்களுக்காக தானம் வழங்க பொது மக்கள் பலர் முன்வருகின்றனர். அத்தகைய மனித நேய மிக்க செயலை அரசு பாராட்டுவதோடு, உடல் தானம் செய்யவதற்கான வழிமுறைகளை நிர்ணயித்துள்ளது. வருங்காலங்களில் சொந்த விருப்பத்தின் பேரில் உடல் தானம் வழங்க முன்வரும் பொதுமக்கள் அருகாமையிலுள்ள மருத்துவக் கல்லூரியை நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ தொடர்புகொண்டு தேவையான படிவங்களையும், வழிகாட்டி குறிப்புகளையும் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.